**செய்தி வெளியீடு எண்: 819** **நாள்: 09.11.2018**

## செய்தி வெளியீடு

ஓமன் நாட்டிலுள்ள தனியார் உணவக நிறுவனத்திற்கு ஹோட்டல் நிர்வாக படிப்பில் பட்டம் அல்லது டிப்ளோமா அல்லது கைவிணைப்பயிற்சியில் தேர்ச்சி பெற்ற கீழ்க்கண்ட பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

குறைந்தபட்சம் இரண்டு வருடம் முதல் ஒன்பது வருடம் வரை பணி அனுபவம் இருத்தல் வேண்டும். மாத ஊதியம், மிகைநேர பணி மற்றும் உணவுப்படி சேர்த்து CHEF PASTRIES-க்கு ரூ.38,000/-முதல் ரூ.57,000/-வரையும், BARISTA-க்கு ரூ.34,200/- முதல் ரூ.47,500/-வரையும், KITCHEN HELPER-க்கு ரூ.24,700/- முதல் ரூ.32,300/-வரையும், WAITERS-க்கு ரூ.21,850/- முதல் ரூ.28,500/- வரையும், STORE KEEPER & CASHIER-க்கு ரூ.19,950/- முதல் ரூ.38,950/- வரையும் மற்றும் FLOWERIST-க்கு ரூ.17,100/- முதல் ரூ.32,300/- வரையும் வழங்கப்படும். வயது வரம்பு 22 முதல் 32வரை இருத்தல் வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு திறமைக்கேற்றவாறு இலவச இருப்பிடம், விமான பயணச் சீட்டு, மருத்துவம் மற்றும் காப்பீட்டுத் திட்டம் போன்ற சலுகைகள் ஓமன் நாட்டின் சட்ட திட்டத்திற்கு ஏற்றவாறு வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பணியிடங்களுக்கு உரிய தகுதி மற்றும் விருப்பமிருப்பின், தங்களின் சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வித்தகுதி, அனுபவம், செல்லத்தக்க பாஸ்போர்ட் நகல்கள் மற்றும் ஐந்து புகைப்படத்துடன் அயல் நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், எண்.42 திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600032, அலுவலகத்தில் 13.11.2018 அன்று காலை 9.00 மணி முதல் நடைபெறும் நேர்காணலில் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது .

மேலும் விவரங்களுக்கு 22505886/22502267/8220634389/ 9566239685 என்ற தொலைபேசியிலும் அல்லது www.omcmanpower.com என்ற வலைதளத்திலும் அறிந்து கொள்ளலாம்.

இந்திய அரசின் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான விவகார அமைச்சகத்தால் வழங்கப்பட்ட அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் முகவர் எண். RC No.B-0821/CHENNAI/CORPN/1000+/5/308/84ஆகும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**